ஏற்படக் கூடும். எனவே அதை அரசாங்கம் அறியுமா, அந்த வகையிலும் பயனுள்ள விதத்தில் அந்த அணையை உருவாக்கு வதற்கு அரசு முயற்சிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–50]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : குடகனாறு சம்பந்தமாக இரண்டுவிதமான அறிக்கைகளை குழு கொடுத்திருக்கிறது. ஒன்று, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அணை உடைந்திருக்கிறது, அதற்கான காரணம் பற்றிய அறிக்கை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அந்த அறிக்கையில் இருக்கக்கூடிய சில கருத்துக்களைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இரண்டாவது அறிக்கை, இந்தத் திட்டம் சம்பந்தமாக மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. அதில் முக்கியமானதொன்று, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் எதிர்பாராதவிதமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படக் கூடிய வெள்ளம் என்று அந்தக் குழு கருத்து தெரிவித்திருக்கிறது. எனவே மீண்டும் இன்னும் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி வெள்ளம் வந்தால் என்ன செய்வது என்ற வகையில் சிந்தித்து அணை கட்டுவது என்றால் கூடுதலாக பல கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கும். எனவே இன்னும் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அது சரியாக இருக்குமா, உடனடியாக சில தேவைகளை நிறைவேற்ற என்ன செய்யலாம் என்பதில் அரசாங்கம் இரண்டாவது விஷயத்தை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மேல்மாந்தை குளத்திற்குக் கால்வாய்

*வினா எண். 176—திரு. ரா. கே. பெருமாள் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் ஒன்றியம் ஆத்தங்கரை அணைக் கட்டிலிருந்து மேல்மாந்தை நீர்ப்பாசனக் குளத்திற்கு தனிக் கால்வாய் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விக்கு இடமில்லை.